மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

08.11.2022 செவ்வாய்க்கிழமை supeedsam.com supeedsam@gmail.com





### ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு

# மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு

## செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம்

**(அ . அச்சுதன், வடமலை ராஜ்குமார் )**

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாட்கள் செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம். 8 கார்த்திகை 2022 இன்று காலை 10.30 மணிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் நடைபெற்றது. இதில் திருகோணமலை மக்கெய்சர் வெளியரங்கில் நடைபெற்ற நிகழ்வில் பொதுமக்கள் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு சார்பில் வெளியிடப்பட்ட மக்கள் பிரகடனம் பின்வருமாறு அமைகின்றது. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ்பேசும் மக்களான நாம், அதிகாரப் பகிர்வு கோரிய எமது தொடர் நூறு நாட்கள் செயல்முனைவின் நூறாவது நாளான, 8 கார்த்திகை 2022 ஆகிய இன்றைய தினம், வடக்கு கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கான நிலைபேறான அரசியல் தீர்வுக்கான மக்கள் பிரகடனத்தை முன்வைக்கிறோம்.

கடந்த காலங்களில் இனப்பிரச்சினைக்கான தீர்வாக ஆட்சியாளர்களால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களைக் கருத்திற்கொண்டும், 13வது திருத்தத்தின் சாராம்சத்தைப் பரிசீலித்தும், குறிப்பாக 2002ம் ஆண்டு நோர்வே நாட்டின் மத்தியத்துவத்துடன் அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் வழிநடாத்தலில் திரு. ஜி. எல். பீரிஸ் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினால் ஒஸ்லோ உடன்படிக்கை மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட “ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு” என்பதனை சீர்தூக்கிப் பார்த்தும் இந்தப் பிரகடனம் மக்களின் குரலாக வெளிப்படுகிறது.

02

# 32 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சுத் திட்டம்

### அடுத்த மாதம் போட்டிப்பரீட்சை

32 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சுத் திட்டமிட்டுள்ளதாகவும், புலமைப் பரிசில் மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் மீண்டும் பிற்போடப் படமாட்டாது என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமயந்த தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்று (07) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், வருட இறுதியில் ஏற்படும் 32 ஆயிரம் ஆசிரியர்

02

# ஒழுக்கத் தகுதிகள் இல்லாத வெற்றிகள் விழுப்பம் அளிக்காது நாட்டுக்கு

**ஜி.ஸ்ரீநேசன், முன்னாள் பா.உ**

எல்லாத் துறைகளுக்கும் அடிப்படையான பாதுகாப்புக் கவசமாக இருப்பது ஒழுக்கமாகும். அந்தத் தகுதி இருந்தால்தான் ஒவ்வொரு துறையிலும் நம்பகமான நிலையான வெற்றிகளை நிலைநாட்ட முடியும்.உலகளாவிய ரீதியில் இலங்கை கிரிக்கற் வீரர்களுக்கு என்று ஒரு கௌரவமான கணிப்புக் காணப்பட்டது.அந்தக்கணிப்பை உச்சப்படுத்திய வீரராக முன்னாள்

08

# நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இந்நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் நாம் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. என நிலையியற் கட்டளை 27(2)ன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இன்றைய(08.11.2022) பாராளுமன்ற அமர்வில் எழுப்பிய கேள்வி எழுப்பினார். அத்துடன், இந்நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழுவும் (UNCRC) சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட

02

# நாட்டை அழித்தவர்கள் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என கூக்குரல் இடுகின்றனர்

**சாணக்கியன்**

நீண்ட காலமாக நீடித்து வரும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் பொருளாதாரப்பிரச்சினைக்குத்தீர்வினைக்காண முடியாது. நாட்டை அழித்தவர்கள் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என கூக்குரல் இடுகின்றனர். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். நாடாளுமன்றில் இன்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றிய அவர், பின்வருமாறு தனது கருத்துக்களை வெளியிட்டார். இலங்கை முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளைப் பார்க்கின்ற போது பொருளாதார பிரச்சினைகளுக்கு மூல காரணமாக கடந்த பல வருட காலமாக இடம்பெற்றுள்ள பிரச்சினைகளை கூறலாம். இப் பொருளாதார பிரச்சினைகளுக்கு 1948 இலிருந்து ஆட்சி புரிந்த அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேஷன் அவர்கள் இந்திய வம்சாவழியினர் ஆற்றிய பாரிய

02







## ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு

தமிழ் பேசும் மக்கள் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வரலாற்றுக்கு முந்தைய காலம்தொட்டு பாரம்பரியமாக தமக்கேயான தனித்துவமான அடையாளத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இப்பிராந்தியத்தில் எண்ணிக்கைப் பெரும்பான்மையினரான தமிழ் மக்களுடன் எண்ணிக்கைச் சிறுபான்மையினரான தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வாழ்ந்து வருகின்றனர். ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டுவந்த இனவாத அடிப்படையிலான அரசியல், மொழி, பொருளாதார, சமூகரீதியானஅடக்குமுறைகள்மற்றும்வன்முறைகளின் காரணமாகவே வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், 2006ல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன.

1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமான 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்தக் கால இடைவெளியில் இலங்கை அரசினால் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர். போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட முற்றாக அழிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டதின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, கௌரவமான, உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம்:

1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும்
2. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மத்திய அரசினால் மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும்
3. ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டும். இதில் பெண்கள் ஐம்பது வீதம் இருப்பது உறுதிசெய்யப்பட வேண்டும்
4. முதலமைச்சர் மக்கள் பிரதிநிதிகள் சபையின் தலைமை உறுப்பினராக திகழ்வார்
5. ஆளுநர் என்பவர் மாகாணத்தின் மக்கள் பிரதிநிகள் சபையைக் கட்டுப்படுத்தாதவராகவும் மத்திய அரசின் கௌரவ பிரதிநிதியாகவும் இருக்க வேண்டும்
6. வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்
7. மாகாண மக்களின் முன்னேற்றத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்திசார் சர்வதேச ஒப்பந்தங்களை மாகாண ஆட்சி மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டிருக்க வேண்டும். இதில் சர்வதேச வணிகம், தொழிற்றுறை அபிவிருத்தி, நகரமயமாக்கல் அடங்கலான கட்டுமான அபிவிருத்தி ஆகியன அடங்கல் வேண்டும்
8. காணி மற்றும் மாகாண ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்ட ஏனைய அனைத்து விவகாரங்கள் சாாந்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் மாகாண ஆட்சிக்கு வழங்கப்பட வேண்டும்
9. மாகாண அலகிற்கான பொலிஸ், உளவுத்துறை சேவைகள் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக அமைய வேண்டும்
10. நீதித்துறை, அரச நிர்வாகம், கல்வி, பொதுச்சுகாதாரம், பொதுப்போக்குவரத்து, தொலைத்தொடர்பு, மின்சாரம், எரிபொருள் அடங்கலான ஏனைய அனைத்து துறைகளும் கவனத்திற்கொள்ளப்பட்டு மாகாண ஆட்சிக்குள்ள அதிகாரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்
11. தற்போது வடக்கு கிழக்கில் காணப்படும் இராணுவமயமாக்கல் முற்றிலும் நீக்கப்பட்டு, தேசிய பாதுகாப்புக்கான இராணுவம் என்பது 1983களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண்டும்
12. தற்போதைய சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் கரையோரப்பாதுகாப்பு நடவடிக்கைகளை மிதக்கும் கடற்படைத்தளங்களை தேவையான கடற்பிரதேசங்களில் மத்திய அரசு அமைக்க வேண்டும். இதன்மூலம் மக்கள் காணிகள் இராணுவத்தின் வசமிருந்து விடுவிக்கப்படுவதுடன் இயல்புவாழ்வை மீளப்பெற முடியும்
13. இலங்கையின் மத்திய அரசானது, வடக்கு கிழக்கு மாகாண அலகு பொருளாதாரப் பலம் அடைவதற்காக குறிப்பிட்ட காலம்வரையில் தேவையான நிதிசார் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும்
14. தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, பல்வேறுபட்ட மனித உரிமை மீறல்கள் சார்ந்து பொறுப்புக் கூறும் கடப்பாட்டை இலங்கை அரசு கொண்டுள்ளது. எனவே சர்வதேச சட்டங்களுக்கு அமைய ஐ.நா.வின் வழிகாட்டலில் சர்வதேச நாடுகளுடன் இணைந்து நீதிப்பொறிமுறைகளை உருவாக்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்
15. வடக்கு கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன–மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய நிலைபேறான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் சட்டங்களையும், திட்டங்களையும் உருவாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும்
16. மத்திய அரசானது, இலங்கை நாட்டின் மக்கள் அனைவரினதும் ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவம் ஆகிய மனிதப் பண்புகளை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை மேற்கொள்ள வேண்டும்

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை அரசுக்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க நாம் அயலிலுள்ள நட்புநாடான இந்தியாவையும், அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும், ஐ.நா.சபையையும் கோருகிறோம். என மக்கள் பிரகடனம் அமைந்திருந்தது.

## நாளுக்கு நாள் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரிப்பு

அனைத்து துஷ்பிரயோகங்களில் இருந்தும் இந்நாட்டு சிறுவர்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பான நாளைய எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

இதன் பிரகாரம்,இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி,பின்வரும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்க்கிறேன்.

01. கடந்த 10 ஆண்டுகளில்,18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம்,பாலியல் பலாத்காரம்,கொடுமை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு எத்தனை முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன? அந்த முறைப்பாடுகள் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை எவ்வாறு செயற்பட்டது என்பது குறித்தும்,குறிப்பாகபெறப்பட்டதண்டனைத் தீர்ப்புகள் தொடர்பான தகவல்கள் தொடர்பான விரிவான அறிக்கையை இந்த கௌரவ சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா? சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம்ஃசெயல்முறையில் அரசாங்கம் திருப்தியடைகிறதா?

02. சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கும்,அத்தகைய துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பாதுகாப்பதற்கும், சிகிச்சையளிப்பதற்கும் ஒரு தேசியக் கொள்கையை உருவாக்கும் நோக்கத்திற்காக 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டம் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.அந்தச் சட்ட அடிப்படையில் தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கை நிறுவப்பட்டுள்ளதா?அவ்வாறில்லை என்றால்,தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையை ஏன் விரைவில் அமுல்படுத்தக் கூடாது?

03. சிறுவர்கள் மற்றும் நியாய சீர்திருத்த சட்ட மூலத்தை (**Child & Justice Reform bill**) நாடாளுமன்றத்தில் சமர்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.அதன் தற்போதைய முன்னேற்றம் யாது? அதனை எப்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவென எதிர்பார்க்கப்படுகிறது?

04. 2021 பெப்ரவரியில்,சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனையை நிறுத்துவதற்கான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியது (**SC Case No: SC/FR/97/2017**). இந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பை சிறார் நியாய நடைமுறையில் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் போதுமான அளவு ஈடுபாட்டை காண்பித்துள்ளதா? மேலும்,சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் குழு (**UNCRC**) பரிந்துரைத்தபடி, தண்டனைச் சட்டத்தின் 82, 341(எ) மற்றும் 308(யு) ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

05. பாதிக்கப்பட்ட பல சிறுவர்களின் மனித உரிமைகளை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் மீண்டும் அதே பணியகத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.இது உண்மையா? அப்படியானால்,இந்நியமனம் எந்த அடிப்படையில் நியாயமானது?

06. சர்வதேச பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறும் பட்சத்தில் அரசிடமிருந்தோ அல்லது கல்வி அமைச்சிலிருந்தோ எவ்வித பாதுகாப்பும் வழங்கப்படுவதாக இல்லை என தெரிவிக்கப்படுகிறது.இது உண்மையா? இந்தப் பாடசாலைகளிலும் எமது நாட்டுப் பிள்ளைகளே கல்வி கற்கும் நிலையில்,கல்வி அமைச்சின் முறையான ஒழுங்குமுறைக்கு இப்பாடசாலைகள் ஏன் உட்படுத்தப்படவில்லை?

## நாட்டை அழித்தவர்கள் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் என கூக்குரல் இடுகின்றனர்

பணிகளாக துறைமுகமமைத்தல், தேயிலைக் கைத்தொழில் வளர்ச்சிக்கு உதவியமை போன்றவற்றைக் குறிப்பிட்டார். னு.ளு. சேனநாயக்க அவர்கள் இந்திய வம்சாவழியினரின் குடியுரிமயினைப் பறித்தார். இலங்கைப் பொருளாதாரத்திற்கு பாரிய பங்களிப்பை வழங்குவது ஆடைக் கைத்தொழிலாக இருக்கின்ற போதிலும் தேயிலையின் ஊடாகவே அதிக ஏற்றுமதியை நாம் பெறுகின்றோம். இவ்வாறு 1948 இலிருந்து நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவிய தேயிலைத் தொழிலாளர்களுக்கு நாம் என்ன உதவிகளை செய்துள்ளோம்? என தனது உரையில் கேள்விகளை எழுப்பினார். மேலும் இந்திய தமிழர்களை வெளியேற்றுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியே தற்போதைய பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு காரணம் எனவும் அவர் குறிப்பிட்டார். மட்டக்களப்பின் ஒரு பகுதியாகவே அம்பாறை காணப்பட்டது. ஆனால் தற்போது ஒரு மாவட்டமாக உருவாகியுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் காணியில்லாத அநேகர் இருந்தனர். எந்த இனத்தவருக்கும் காணி வழங்கப்படாத போது வேறு இடங்களிலிருந்து மக்களை கொண்டு வந்து அம்பாறை மாவட்டத்தில் குடியமர்த்தினர். நான் 500 இளைஞர்களை மாத்தறைக்கு அழைத்து சென்று காணி வழங்க முனைந்தால் மாத்தறை இளைஞர்கள் விரும்புவார்களா? இதற்கு உடன்படுவார்களா? இன்று பொருளாதார பிரச்சினையைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள மக்களுக்கு உண்மையை கூறுங்கள். “நாட்டை அழித்தது அரசியல்வாதிகள் தான்” என. தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்காது தடையாக இருப்பது யார்? என நீங்களே கூறுங்கள் என இரா சாணக்கியன் அவர்கள் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கூறினார்.

## 32 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சுத் திட்டம்

வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சுத் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைவாக, 22 ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரிய சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்றும் கூறினார். தற்போது பாடசாலைகளில் 22 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. அமுலுக்கு வரும் புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக இந்த வருட இறுதியில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆரம்பத் திட்டமாக பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சையை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது அபிவிருத்தி உதவியாளர்களாக பணிபுரிபவர்களும், அரச சேவையில் உள்ள ஏனைய பட்டதாரிகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம். இதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார். அடுத்த வருட முதல் பாடசாலை தவணை ஆரம்பிக்கும் போது திட்டமிட்டபடி பாடப் புத்தகங்களை வழங்க தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் . இதற்காக இந்திய கடனுதவி கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் கூறினார்.



# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**25267 | வே | 1990**
நெல்லியடி | இந்து | MD
Asst. Manager
புனர்பூசம் (மிதுனம்)
182 செ.மீ

**25150 | வே | 1991**
கிளிநொச்சி | இந்து | A/L
Finance Manager
உத்தரட்டாதி (மீனம்)
152 செ.மீ

**25108 | வே | 1989**
மூளாய் | இந்து | BSc
Network Engineer
அத்தம் (கன்னி)
167 செ.மீ | செவ்: 12

**25211 | வே | 1990**
மட்டக்களப்பு | இந்து | BSc
Manager | UK
ரோகிணி (ரிஷபம்)
165 செ.மீ | செவ்: 12

**25254 | வே | 1978**
நாவற்குடா | இந்து | Diploma
Forklift Driver | Australia
அஸ்வினி (மேடம்)
173 செ.மீ

**25242 | வே | 1992**
வவுனியா | இந்து | MD
Civil Eng.Project Manager
கார்த்திகை (ரிஷபம்)
168 செ.மீ

**25223 | மு.ரா | 1992**
இரத்தினபுரி | இந்து | BD
Software Engineer
சதயம் (கும்பம்)
170 செ.மீ

**25235 | வே | 1991**
சாவகச்சேரி | இந்து | BD
Service Specialist
பூரம் (சிம்மம்) | UK
164 செ.மீ | செவ்: 04

**25239 | கு | 1991**
பருத்தித்துறை | இந்து
Civil Engineer | BSc
உத்தரட்டாதி (மீனம்)
172 செ.மீ | சு.செவ்: 10

**14850 | வே | 1986**
காரைநகர் | இந்து | UK
MBA | Engineer
அவிட்டம் (மகரம்)
170 செ.மீ

**25214 | வி | 1988**
மட்டக்களப்பு | இந்து
Business | A/L | France
உத்தராடம் (மகரம்)
170 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**25241 | வே | 1994**
சுன்னாகம் | இந்து
Supervisor | Diploma
மிருகசீரிடம் (ரிஷபம்)
170 செ.மீ | செவ்: 12

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**25183 | வே | 1996**
வரணி | இந்து | MBBS
Student (Final year)
பூரம் (சிம்மம்)
161 செ.மீ

**25247 | வே | 1993**
யாழ்நகர் | RC | MSc
Development Officer
உத்தரம் (கன்னி)
155 செ.மீ

**25193 | கோ | 1993**
கரணவாய் | இந்து | Aus
Master - Environment &
Climate Emergency
அஸ்வினி (மேடம்) | 175 செ.மீ

**25114 | வே | 1991**
நல்லூர் | இந்து | BD
Software Engineer
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | சு.செவ்: 10

**14905 | வே | 1989**
பலாலி | இந்து | A/L
Medical Lab Assistant
மிருகசீரிடம் (மிதுனம்)
160 செ.மீ

**15146 | வே | 1988**
சுதுமலை | இந்து
MBBS | Doctor
உத்தராடம் (மகரம்)
168 செ.மீ

**25217 | வே | 1997**
கொக்குவில் | இந்து
Diploma | Job Seeker
ரேவதி (மீனம்)
153 செ.மீ

**25117 | வே | 1994**
மல்லாகம் | இந்து | BSc
Medical Lab Assistant
ஆயிலியம் (கடகம்)
165 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**15179 | வே | 1992**
காரைநகர் | இந்து | CIMA
Tax Associate
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**25190 | வே | 1989**
மட்டக்களப்பு | RC | BD
Development Officer
மகம் (சிம்மம்)
152 செ.மீ | செவ்: 01

**15248 | வே | 1988**
கரவெட்டி | இந்து | BA
Social Media
Coordinator | பூரம் (சிம்மம்)
170 செ.மீ | UK

**25159 | u | 1998**
நெல்லியடி | இந்து
Diploma | Maths Teacher
மகம் (சிம்மம்)
158 செ.மீ | சு.செவ்: 07

**15173 | வே | 1995**
வவுனியா | இந்து | BD
Research Assistant
ரேவதி (மீனம்)
164 செ.மீ

## இந்தியாவிலிருந்து பிரபல ஜோதிடர்
## பட்டுக்கோட்டை சுப்ரமணியன்

**அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில்,**
**உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு**
**முன்பதிவு செய்ய அழையுங்கள் 074 172 4524**



077 716 4524 | www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# BEAUTY QUEEN MAKEOVER RUPENTHINI JEGAN
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி











**08th of January 2023**
**Contact 076 9759197**
**At BMICH MAIN HALL**

# ஊடக ஆர்வலர்களுக்கான ஆலோசனையும் மூத்த ஊடகவியலாளர் கௌரவிப்பும்




**(கோகிலாவதனி)**

திருகோணமலை நகரசபை பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று 07.11.2022 காலை10.00 மணிக்கு, எழுத்தாணி கலைப் பேரவையின் நெறிப்படுத்தலில் தலைவர் வ .ராஜ்குமார் தலைமையில் ஊடகவியலாளர்களுக்கான சீருடை வழங்கி வைக்கப்பட்டதுடன் எதிர்கால சேவை முன்னெடுப்பு தொர்பான ஆலோசனையும் வழங்கப்பட்டது. மூத்த ஊடகவியலாளர் கலாபூசணம் வே.தங்கராசா அர்களின் சேவை நலன் பாராட்டி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மூத்த,இளம் ஊடகவியலாளர்கள்,ஊடக கற்கை மாணவர்கள், ஆசிரியர்கள்,இலக்கிய ஆர்வலர்கள் கலந்துசிறப்பித்தனர். மேற்படி நிகழ்வின் வளவாளராக அரசியல் ஆய்வாளர் ஆ.யதீந்திரா அவர்கள் பங்கேற்று ஊடகத்துறையின் நிலைபேறு ,ஆளுமை நிறைந்த வினைத்திறனான செயற்பாடு போன்ற விடயங்களில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார். நிகழ்வில் சிரேஸ்ட ஊடகவியலாளர் அ.அச்சுதன் அவர்கள் எழுத்தாணி கலைப் பேரவையின் எதிர்கால நர்வும் ஊடகத்துறையும் பற்றி சிறப்புரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் பாலாலய கும்பாபிசேகம்

**வி.சுகிர்தகுமார்**

ஐந்து அடி கற்சிலை அமைந்துள்ளதும் பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்த மருத மரத்தை தல விருட்சமாகவும் கொண்ட அக்கரைப்பற்று வாச்சிக்குடா ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தானத்தின் பாலாலய கும்பாபிசேகம் நேற்று (07) இடம்பெற்றது.

ஐந்து முகங்களுடன் ஐந்தடி உயரத்தில் திருக்காட்சி தரும் ஸ்ரீ இராம பக்த பஞ்சமுக ஆஞ்சநேயரின் கற்சிலை அமைந்துள்ள ஆலயங்களில் முக்கியத்துவம் மிக்கதான இவ்வாலயத்தின் பாலாலய கும்பாபிசேகம விசேட பூஜைகளானது கடந்த 05 ஆம் திகதி கர்மாரம்ப கிரியைகளோடு ஆரம்பமாகி 06ஆம் திகதி இடம்பெற்ற கிரியைகளோடும் நேற்று இடம்பெற்ற இடம்பெற்ற பாலாலய கும்பாபிசேகத்துடனும் நிறைவுற்றது.



அதிசயம் மிக்க இப்பெருமைமிகு ஆலயமானது குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் பரிபூரண ஆசீர்வாதத்துடன் ஹனுமன்தாசன் ராம்ஜி சுவாமிகளின் வழிகாட்டலுடன் நடைபெற்று வருகின்றது. இன்று காலை குரு பூஜை நடைபெற்றதுடன் பாலாலய கும்பாபிசேகத்தின் நடைபெற்று விசேட பூஜைகளும் நடைபெற்றது.

தொடர்ந்து விசேட யாகபூஜைகள் ஆரம்பமானதுடன் பிரதான கும்ப வெளிவீதி உலாவும் இடம்பெற்றது. வெளிவீதி உலாவாக எடுத்துவரப்பட்ட பிரதான கும்பம் ஆஞ்சநேய சுவாமி மீது சொரியப்பட்டதுடன் பரிவார மூர்த்திகள் மீதும் கும்பங்கள் சொரியப்பட்டு 108 ஆஞ்சநேய மந்திர உச்சாடணமும் பூஜையும் நடைபெற்றதன் பின்னர் பாலாலய பூஜைகள் நிறைவுற்றது. காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் ஆசிர்வாதத்தோடு ஆலய பரிபாலகர் நல்லதம்பி கந்தசாமி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கிரியைகள் யாவற்றையும் கிரியாகலாநிதி வித்தியாசாதகர் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ புண்ணிய கிருஸ்ணகுமாரக்குருக்கள் தலைமையில் கிரியாகிரம ஜோதி அலங்கார பூசனம் சிவாகமபானு அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் சிவஸ்ரீ சோ.கோகுலதாச சர்மா ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ த.குகனேஸ்வர சர்மா ஆகியோர் நடாத்தி வைத்தனர்.

# சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



திருகோணமலை மாவட்டத்திலுள்ள இளைஞர் யுவதிகளின் "மொழிவிருத்தியினை மேம்படுத்தும்"நோக்கில் **RECDO** நிறுவனத்தினால் 100 மணித்தியாலயங்கள் (சிங்கள,தமிழ்) மொழி பயிற்சியினை நிறைவு செய்த 350 பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன. அதனடிப்படையில் தோப்பூர்,கிண்ணியா பிரதேசங்களில் பயிற்சியினை நிறைவுசெய்த 150 பயிற்சியாளர்கள் (07) சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி கேட்போர் கூடத்தில் **RECDO** நிறுவனத்தின் திட்ட முகாமையாளரும், மூதூர் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.எஸ்.எம்.தாணீஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவா மற்றும் **RECDO** நிறுவனத்தின் தலைவர் ஜே.எம்.அஷார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# வீடமைப்பு திட்டத்தினை மீள ஆரம்பிப்பதற்கான கண்காணிப்பு விஜயம்

**ஹஸ்பர்⁶**

கடந்த நல்லாட்சி அரசு காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டுள்ள நிலையில் உள்ள கிண்ணியா துவரங்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட இரண்டு வீடமைப்பு திட்டங்களை மீள ஆரம்பிப்பது சம்பந்தமாக ஆராய்வதற்கான கண்காணிப்பு விஜயமொன்றை நேற்று (07) திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபால் மேற்கொள்ளப்பட்டது. இவ்விஜயத்தில் அல் ஹித்மத்துல் உம்மா பவுண்டேசன் பணிப்பாளர் பாத்திஹ் ஹஸ்ஸாலி, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் சதாத் கரீம், ஐக்கிய.மக்கள்.சக்தியின் இளைஞர் அமைப்பாளர் எம்.டி. நசீர் ஆகியோரும் இணைந்திருந்தனர்.



# கவனயீர்ப்பு போராட்டம்




**(கஜிந்தன்)**

இன்றையதினம் (08), விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்யுமாறு கோரி புலோலி கமநல சேவைகள் நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு தேவையான மண்ணெண்ணெய், செயற்கை உரம், கிருமிநாசினி மற்றும் உள்ளீட்டு பொருட்களை வழங்குமாறு கோரி குறித்த போராட்டம்முன்னெடுக்கப்பட்டது. வடகிழக்கு புனர்வாழ்வு அமைப்பும் விவசாயிகளும் இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர். இதன்போது போராட்டக்காரர்கள் பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு, மண்ணெண்ணெய் கொள்கலன்களை முன்னே வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# மட்டு.சிவாநந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் மாபெரும் தொழிற்கல்வி சந்தை

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

முதன் முறையாக கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோனமலை ஆகிய மூன்றுமாவட்டங்களிலும்மாபெரும் தொழிற்கல்வி சந்தையை கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் "திறன்மிகு ஊழியப்படையால் தொழிலுலகை வெல்வோம்" எனும் தொனிப்பொருளில் நடத்தத் திட்டமிட்டுள்ளது. அதனடிப்படையில், இம்மாதம் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் பின்வரும் திகதி அடிப்படையில் இம்மாபெரும் தொழிற் கல்வி சந்தை நடாத்தப்படவுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்மாதம் நவம்பர் 08, 09, 10ஆம் திகதிகளில் மட்ஃ சிவாநந்தா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்திலும், அம்பாறை மாவட்டத்தில் இம்மாதம் நவம்பர் 15,16,17, ஆம் திகதிகளில் நிந்தவூர் மாவட்ட தொழில்பயிற்சி நிலையத்திலும் திருகோணமலை மாவட்டதில் இம்மாதம் நவம்பர் 22,23,24 ஆம் திகதிகளில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வாரா இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் நடாத்தத்திட்டமிடப்பட்டுள்ளது.

இத் தொழிற் கல்விச் சந்தையினூடாக, உயர்தரப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் அவர்களது உள்ளார்ந்த திறன்களை இனங்காணவும், ஏனையோர் உயர்கல்வி வாய்ப்புகளை அறியவும், திறனை வளர்க்கத்தக்க தொழிற்பயிற்சி நிலையங்களை அடையாளம் காணவும், தொழில் வழங்குனர்கள் மற்றும் சுய முயற்சியாளர்களைக் கண்டறியவும் அவர்களது அனுபவங்களைப்பெறத்தக்கதோர் அரிய சந்தர்ப்பமாகும்.

உயர்தரப் பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள், உயர் கல்வியைக்கற்ற விரும்புவோர், தொழித்திறனை வளர்க்க ஆர்வமாயுள்ளோர், சுயதொழில் முயற்சிகளில் ஈடுபடவுள்ளோர் மற்றும் தொழில் வாய்ப்புகளைத்தேடும் அனைவரும் கலந்து பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றனர் ஏற்பாட்டுக் குழுவினரான கிழக்கு மாகாண கல்வித்திணைக்களத்தினர்.

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கான யூரியா உரம் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிப்பு

**மட்டக்களப்பு**

விவசாய அமைச்சினால் இலங்கை லக்போஹெர நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள யூரியா உரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்பட்ட 3434 மெட்ரிக் தொன் யூரியா உரத்தினை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு லக்போஹெர களஞ்சிய சாலையில் இடம்பெற்றது. இலங்கை அரசாங்கத்தினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதல் கட்டமாக வழங்கப்பட 1943 மெட்ரிக் தொன் யூரியா உரத்தினை தொடர்ந்து இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்டுள்ள 3434 மெட்ரிக் தொன் யூரியா உரம் மற்றும் விவசாய கிருமிநாசினி ஆகியன மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடன் விவசாய அமைச்சரினால் கையளிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயத்தினை மேற்கொண்ட விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உட்பட இராஜாங்க அமைச்சர் எஸ். வியாளேந்திரன் ஆகியோரினால் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனிடன் குறித்த உரத்தொகுதி கையளிக்கப்பட்டுள்ளது. இலங்கை லக்போஹெர நிலையத்தின் கிழக்குமாகாண பிராந்திய முகாமையாளர் கே.விமலனின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட விவசாய பிரதி பணிப்பாளர் வி.பேரின்பராஜா, மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகநாத், தேசிய உர செயலகத்தின் மாவட்ட பிரதிப்பணிப்பாளர் கே.எல்.எம்.சிராஜீன் உட்பட இலங்கை உர நிலையத்தின் கிழக்குமாகாண உத்தியோகத்தர்கள், விவசாயத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை வலய மாணவர்களுக்கான நிலையறி பரீட்சை



**எஸ்.சிராஜ்தீன்**

கல்முனை வலய மாணவர்களுக்கான நிலையறி பரீட்சைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மூன்றாந்திகதி ஆரம்பித்த இந்த பரீட்சை பதினைந்தாம் திகதி முடிவடையவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம் தெரிவித்துள்ளார். இதேவேளை இரண்டாம் தவணைப்பரீட்சை எதிர்வரும் பதினேழந் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் இதன் நிமித்தம் பாடசாலை மேற்பார்வைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். நிலையறிபரீட்சை இரண்டாம் தவணைப்பரீட்சை இரண்டிலும் நூனசித்தி பெறும் மாணவர்களுக்கு விசேட கற்பித்தல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# நூலகங்களுக்கு புத்தகங்கள் வழங்கி வைப்பு

**எப்.முபாரக்**

திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் ஆரம்பிக்கப்பட்ட "பாடசாலை நூலக ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின்" கீழ் மேலும் இரண்டு பாடசாலை நூலகங்களுக்கு (07) புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டன. கங்கதலாவ ஐக்கிய ஊடக மன்றம் விடுத்த வாய்மொழி வேண்டுகோளுக்கு இணங்க "Ainous Sams Foundation" இன் உப தலைவர் திரு.யூசுப் பௌமி **(Pahami)** இந்த நூல்களை வழங்கினார்.

இவ்வாறு கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் தலைவர் அமதோர அமரஜீவ அவர்கள் நூலகப் புத்தகங்களை திருகோணமலை குச்சவெளி அல்-நூரியா முஸ்லிம் கல்லூரியின் அதிபர் எம்.எச்.எம். சபீரிடம் வழங்கி வைத்ததுடன், திருகோணமலை இறக்கண்டி அல் ஹம்றா முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கும் அதிபர் எம்.என்.ஹிதாயத்துல்லா அவர்களுக்கு புத்தகங்களை வழங்கி வைத்தார். கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றத்தில், விநியோகத்தை செயலாளர் திரு.மனு சங்க காரியவசம் அவர்கள் செய்தார். (இந்த புத்தகங்களை வழங்கிய இலவச பத்திரிகை இயக்கம் மற்றும் மாற்றுக் கொள்கை மையத்திற்கு கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றம் நன்றி தெரிவிக்கிறது)

# அதிகாரம் நூல் வெளியீட்டுவிழா





சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயத்தின், அரசறிவியல் மன்றத்தினால் வெளியிடப்படும் “அதிகாரம்” நூல் வெளியீட்டுவிழா நிகழ்வு இன்றையதினம் (08) பாடசாலையின் பொது மண்டபத்தில் நடைபெற்றது. விருந்தினர்கள் மாலை அணிவித்து, மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கி இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. பிரதம விருந்தினரான திரு. ஈ. சரவணபவன் அவர்கள் நூலினை வெளியிட, தொழிலதிபர் ஆ.குணசேகரம் அவர்கள் முதற்பிரதியினை பெற்றுக்கொண்டார். பாடசாலை அரசறிவியல் மன்றத்தின் தலைவர் செல்வன் யோ. அலெக்சன் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் விருந்தினர்கள், பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# இரு வெள்ளிப் பதக்கங்களை தனதாக்கியது சிவானந்த பாடசாலை



2022ம் ஆண்டுக்கான தேசிய மட்ட அகில இலங்கை தமிழ் மொழித்தின போட்டி 06.11.2022 இல் கொழும்பு இந்து மகளிர்கல்லூரியில் இடம்பெற்றது. இப் போட்டியில் தேசிய மட்டத்தில் இரு வெள்ளிப் பதக்கங்களை தனதாக்கியது மட்ஃ சிவானந்த வித்தியாலயம். இதில் குழு இசை நிகழ்ச்சியில் திருமதி.ஜெ. கலிங்கேஸ்வரன் ஆசிரியரின் வழிப்படுத்தலில் பங்குகொண்ட மட்ஃசிவானந்தவித்தியாலய மாணவர்கள் இரண்டாம் இடத்தினை பெற்று வெள்ளிப் பதக்கத்தினை தமதாக்கிக்கொண்டனர். அத்தோடு தனி இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட செல்வன். சிற்சபேசன் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப பதக்கத்தை தனதாக்கிக்கொண்டு கிழக்கு மாகாணத்திற்கும் தமது பாடசாலைக்கும் பெருமை சேர்த்தார்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# சிவசங்கர் ஜி முன்னிலையில் இடம் பெற்ற ஆறுமணி நேர பிரமாண்டமான சண்டி ஹோமம்







**( காரைதீவு சகா)**

உலகிற்கு முதல் சைவசித்தாந்த நூலை தந்தவரும், நமசிவாய என்ற பஞ்சாட்சர மந்திரத்தை அளித்த மூத்த சித்தரான திருமூலர் பெருமானின் குருபூஜையை முன்னிட்டு கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றுவந்த மாபெரும் சண்டி ஹோமம், நேற்று(8) செவ்வாய்க்கிழமை ஆறுமணி நேர பாரிய யாகத்துடன் நிறைவு பெற்றது.சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜியின் முன்னிலையில் மட்டக்களப்பு அமிர்தகழியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை(6) ஆரம்பமாகிய சண்டி ஹோமம், நேற்று (8) செவ்வாய்க்கிழமை நிறைவடைந்தது. இலங்கையின் இலங்கை பிரபல வேத வாத்தியார் சிவஸ்ரீ வத்சாங்க குருக்களின் தலைமையிலான சிவசிறி சிவபால குருக்கள் உள்ளிட்ட வேத விற்பன்னர்கள் எண்மர் சண்டி ஹோமத்தை நடத்தினர். அனைவரும் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்தவர்கள். ஹோமத்துக்கான திரவியங்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டிருந்தன.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி சங்கல்பத்தில் இருந்து யாகத்தில் பங்கேற்றார். யாகத்தில் சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன் உப தலைவர் மனோகரன் நமசிவாய மகேஸ்வரன் சுவாமி தியாகராஜா காரைதீவு பக்தர்களான ஜெயசிறில் சகாதேவராஜா கீதா பிரி மற்றும் கனடா குமார் உள்ளிட்ட பல பிரமுகர்கள் பங்கேற்றனர். நேற்று (8) செவ்வாய்க்கிழமை அபூர்வமான ஐப்பசி பௌர்ணமி திதியில், அதிகாலை 3 மணிக்கு மாபெரும் சண்டி ஹோமம் ஆரம்பமாகியது. தொடர்ந்து இந்த பிரபஞ்சத்தில் ஆதாரமாக இருக்கும் 13 சக்திகளுக்கும் யாகத்தில் சிறப்பு பூஜைகள், 64 உபசாரங்கள் இடம் பெற்று காலை 9 மணிக்கு பூர்ணாகுதி இடம் பெறுதலுடன் ஹோமம் நிறைவுக்குவந்தது.

“கல்விக்கு கைகொடுப்போம்”
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது

**(பாரூக் சிஹான்)**

ஐஸ் போதைப்பொருளை விநியோகித்து வந்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து திங்கட்கிழமை(7) இரவு கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிங்கள மகா வித்தியாலய வீதியில் வைத்து சந்தேக நபர் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் கல்முனை குடி 13 பகுதியை சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 2 கிராம் 50 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்னாயக்க மேற்பார்வையில் பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி.எம் டயஸ் தலைமையிலான உப பொலிஸ் பரிசோதகர் எச்.ஜி.பி.கே நிஸ்ஸங்க உள்ளிட்ட பொலிஸ் கன்டபிள்களான கண்டப்பகல (75492) இந்துநில்(66833) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட நபர் உள்ளிட்ட சான்று பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியதுடன் விசேட அதிரடிப்படையினர் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் பௌர்ணமி கலை விழா





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாநகர சபையின் கலை கலாசார குழுவினால் மாதாந்தம் நடாத்தப்பட்டுவரும் பௌர்ணமி கலைவிழாவினை கலை கலாசார குழுத்தலைவரும் மாநகர சபை உறுப்பினருமான மா.சண்முகலிங்கம் தலைமையில் நேற்று (07) திகதி மாலை இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளார்.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் மாநகர சபை கீதம் இசைக்கப்பட்டு மௌன இறைவணக்கத்தினை தொடர்ந்து கதிரவன் கலைக்கழக உறுப்பினர்களினால் தமிழ்மொழி வாழ்த்து இசைக்கப்பட்டு அதனை தொடர்ந்து புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றுள்ளது. எமது மண்ணுக்கே உரித்தான கலை கலாசார நிகழ்வுகள் கதிரவன் கலைக்கழகத்தினால் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டதுடன் கதிரவன் கலைஞர்களின் நகைச்சுவை நாடகம், “தற்கால வாழ்க்கை சுகமானதா? சுமையானதா?” எனும் தலைப்பில் கதிரவன் பட்டிமன்ற குழுவின் 101 வது சிறப்பு பட்டிமன்றமும் இதன் போது அரங்கேற்றப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் மாநகர பிரதிஆணையாளர் உ .சிவராசா, மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பெரும்திரளான பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டு கண்கவர் கலை, கலாசார நிகழ்வுகளை கண்டு மகிழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாநகர சபையின் ஏற்பாட்டில் மாதாந்தம் முழு மதி தின கலை நிகழ்வு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பிளாந்துறை - குருக்கள்மடம் படகுப்பாதையை புனரமைக்குமாறு கோரிக்கை



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவாங்கரைப் பிரதேசத்திற்கும், எழுவாங்கரைப் பரதேசத்திற்கும் இடையிலான பிரதான போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக அமைவது மட்டக்களப்பு வாவியை ஊடறுத்துச் செற்றும் அம்பிளாந்துறை – குருக்கள்மடம் ஓடத்துறைப் படகுப்பாதையாகும். இப்போக்குவரத்து மார்க்கத்தினூடாக விவசாயிகள், ஆசிரியர்கள், அரச, மற்றும் அரச சார்பற்ற, ஊழியர்கள், வியாபாரிகள் பொது மக்கள் எனப்பலரும் பயணம் செய்து வருகின்றனர்.

இப் படகுப் பாதை தற்போதைய நிலையில் மிகவும், பழுதடைந்த நிலையில் சேவையிலீடுபடுவதனால் அதில் பயணம் செய்யும் மக்கள் மிகுந்த அச்சத்துடன் பயணிப்பதாக அங்கலாய்க்கின்றனர். இப்படகுப்பாதையில் தூவரங்கள் காணப்படுவதோடு, துருப்பிடித்து நிலையில் உள்ள படகுப் பதையை புணரமைத்து நவீன முறைப்படுத்தி பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாகு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கசிப்பு வைத்திருந்த இருவருக்கு அபராதம்

எம்.எம்.நௌபீக்

மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மனைச்சேனை மல்லிகை தீவு பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் சட்டவிரோதமான முறையில் கசிப்பினை வைத்திருந்ததாக மூதூர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு (8) நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதை அடுத்து இரண்டு சந்தேக நபர்களுக்கும் தலா ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்தமை குறிப்பிடத்தக்கதாகும். சந்தேக நபர்கள் இருவருள் ஒருவர் 19,000 மில்லி லீட்டர் கசிப்பினையும் மற்றைய சந்தேக நபர் 30,000 மில்லி லீட்டர் கசிப்பினையும் உடமையாக வைத்திருந்ததாக பொலிசார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட கசிப்பினையும் வழக்குச் சான்றாக பொலிஸார் நீதிமன்றில் காட்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கொட்டும் மழைக்கு மத்தியில் அம்பாறை மாவட்ட பிரகடனகூடல் காரைதீவில்








(வி.ரி .சகாதேவராஜா)

“ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அரசியல்தீர்வு” எனும் தீர்மானம் நேற்று (8) செவ்வாய்க்கிழமை காலை வடகிழக்கின் 8 மாவட்டங்களிலும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு பிரகடனம் செய்யப்பட்டது. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திற்கான பிரகடன கூடல் நேற்று காரைதீவு கடற்கரை சிறுவர் பூங்கா அருகில் நடைபெற்றது. செயல்முறையின் மாவட்ட இணைப்பாளர் து.காத்தவராயன்( காந்தன்) தலைமையில் நடைபெற்றது. ஆரம்பம் முதல் இறுதி வரை மழை பொழிந்து கொண்டிருந்தது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் , முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன், மாணவர் மீட்பு பேரவை தலைவர் செ.கணேஷ், கல்முனை மாநகர சபை உறுப்பினர் கே.சிவலிங்கம் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஜெயராணி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். மாவட்டத்தில் உள்ள பல பிரதேசங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த தமிழ்பேசும் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு கோரிய நூறு நாட்கள் செயல்முனைவின் நூறாவது நாள் மக்கள் பிரகடனம் வெளியிடும் தினம் நேற்று (8) செவ்வாய்க்கிழமை ஆகும். நேற்று காலை 10.30 மணிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள 08 மாவட்டங்களிலும் இப் பிரகடனக்கூடல் நிகழ்வு நடைபெற்றது.

குறிப்பாக,1948 இற்கு பின் இலங்கையில் ஆட்சிக்கு வந்த சிங்கள பெரும்பான்மை அரசுகள் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட முறையில் மேற்கொண்டு வந்த இனவாத அடிப்படையிலான அரசியல், பொருளாதார, சமூக, இன ரீதியான அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளின் காரணமாகவே வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள் மாகாண முறைமையிலான தீர்வு வழங்கப்பட வேண்டும், தமிழ் மொழியும் அரச கரும மொழியாக அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 13வது திருத்தசட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

எனினும், திட்டமிட்ட வகையில் சிங்கள பேரினவாத சக்திகளால் 2006ல் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகு பிரிக்கப்பட்டு வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக்கப்பட்டன. 1987இல் மேற்கொள்ளப்பட்ட இந்திய – இலங்கை உடன்படிக்கை மூலமாக 13வது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இற்றுடன் 35 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டது. இந்தக் கால இடைவெளியில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன் தமிழர்கள் மீது போர்க்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தொடர் இடப்பெயர்வு மற்றும் பலவருடகால அகதிமுகாம் வாழ்வை அனுபவித்தனர். போரினால் இருப்பிடங்களும், சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் மரங்கள் உட்பட அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இராணுவமயமாக்கம், திட்டமிட்ட முறையிலான நில அபகரிப்பு, மனித உரிமை மீறல்கள் காரணமாக பாரிய அச்சுறுத்தலை இன்றுவரையில் தமிழ் சமூகம் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எழுபது ஆண்டுகளுக்கு மேலாக எதிர்கொண்டுவரும் அரசியல் அடக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவந்து, சுய கௌரவமுள்ள உரிமைகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கு அடிப்படையான நிலைபேறான அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்துகிறோம். அந்த அடிப்படையிலேயே வடக்கு கிழக்கு பிரதேசங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் 100 செயல்முனைவானது ‘வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்’எனும் மக்கள் குரலின் ஊடாக முன ் வைக்கப்படும் மக்கள் பிரகடனமாகவே ‘ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அரசியல்தீர்வு’ என்பது அமைந்துள்ளது. எனவே வடக்கு கிழக்குத் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இம் மக்கள் பிரகடனத்திற்கான ஒன்று கூடலில் அனைவரும் பங்கேற்று தமிழ் பேசும் மக்களின் கோரிக்கையை ஒரே குரலில்ஓங்கி ஒலிக்குமாறு கோருகிறோம். வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள 08 மாவட்டங்களிலும் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மக்கள் பிரகடனக் கூடல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# உழவு இயந்திரங்கள் அமைச்சரினால் வழங்கிவைப்பு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கையின் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் பாரிய வெற்றியைப் பெற்றுத்தந்துள்ளதாகவும் எதிர்காலத்தில் இன்னும் பல திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவாஞ்சிகுடியில் விவசாய அமைச்சின் உதவி திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் மாதுளம்பழ செய்கையினை அமைச்சர் பார்வையிட்டார்.

நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் வகையில் இந்த மாதுளம்பழ செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான உழயவு இயந்திரங்கள் அமைச்சரினால் கையளிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிகுடி, செங்கலடி, வெல்லாவெளி, களுதாவளை, அம்பாறை மாவட்டத்தின் கோமாரி ஆகிய பகுதிகளில் நவீன விவசாய மயமாக்கல் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் மாதுளம்பழ செய்கை, வாழைப்பழ செய்கை, கொச்சிக்காய் செய்கையாளர்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத், மட்டக்களப்பு மாவட் அரசாங்க அதிபர் கே.கருணாகரன், களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரெட்னம் உட்பட பலர் கலந்துகொண்டுள்ளனர். இதன்போது 05 விவசாயிகளுக்கான காணி உறுதிகள் வழங்கப்பட்டதுடன் கடந்தகால வெள்ளம் மற்றும் வறட்சி காரணமாக பாதிக்கப்பட்ட 15 விவசாயிகளுக்கான நஸ்ட ஈட்டு கொடுப்பனவும் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

# மொனறாகலையிலிருந்து கல்முனை நோக்கி சர்வதேச நீரிழிவு தின சைக்கிள் அஞ்சலோட்டம்




நூருல் /ஹுதா உமர்

இம்மாதம்13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் நீரிழிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சைக்கிளிங் கிரீன் (**Cycling Green**) கழகமானது இலங்கை இள வைத்தியர்கள் சங்கம், வெல்லஸ்ஸவின் குரல், மொனறாகலை மாவட்ட பொது வைத்தியசாலை, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஆகியவற்றுடன் இணைந்து மாபெரும் சைக்கிள் அஞ்சலோட்டத்தை மேற்கொள்ளவுள்ளது என சைக்கிளிங் கிரீன் அமைப்பினர் தெரிவித்தனர்.

திங்கட்கிழமை இரவு மருதமுனை கமு/கமு/அல்–ஹிக்மா வித்தியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளிக்கும் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் சைக்கிளிங் கிரீன் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட இலங்கை ஊவா வெல்லச பல்கலைக்கழக பதிவாளர் எம்.எப்.ஹிபதுல் கரீம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக உயிரியல் விஞ்ஞான பிரிவின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.எம். றியாஸ் அஹமட், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக வேலைத்தள பொறியியலாளர் எம்.எஸ்.எம். பஸீல், கல்முனை வலயக்கல்வி அலுவலக பிரதிக்கல்வி பணிப்பாளர் கலாநிதி சத்தார் எம் பிர்தௌஸ் ஆகியோர் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் 100 ஆவது நாளின் இறுதி நாள்



க.ருத்திரன்

இலங்கை அரசே, 'ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்துக.' என்ற தொணிப் பொருளில் தமிழ் மக்களுக்கான கௌரவமான அரசியல் உரிமையை வலியுறுத்தி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் 100 நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 100 ஆவது நாளின் இறுதி நாள் நிகழ்வுகள் பல தடைகளை தாண்டி இன்று காலை (8) மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தன்னாமுனை மட் புனித சூசையப்பர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.கொட்டும் மழை என்றும் பாராமல் மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் பெருமளவான மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

இன்று காலை தன்னாமுனை கல்லூரி மைதானத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் 100 ஆவது நாளை நினைவு கூறும் முகமாக ஒளிச் சுடர் ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தனர். அமைந்துள்ளது.இறுதியில் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை அடங்கிய பலூன்கள் சமூக செயற்பாட்டாளர்களினால் பறக்கவிடப்பட்டன.




கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் ஏற்பாட்டில் கதிரவன் இன்பராஜாவின் அப்பாவின் ஆரிராரோ (தாலாட்டுப் பாடல்கள் )நூல் அறிமுக விழா 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு மட்/மட் புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) மண்டபத் தில் இடம்பெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள் .

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

# ஒழுக்கத் தகுதிகள் இல்லாத வெற்றிகள் விழுப்பம் அளிக்காது நாட்டுக்கு

கிரிக்கற் அணித்தலைவர் அர்ச்சுன ரணதுங்கவைக் குறிப்பிடலாம்.1996 இல் எமது கிறிக்கற் அணி உலகச் சாம்பியன் ஆனது.அதற்கு விளையாட்டுத் தகைமைரீதியாகவும், ஒழுக்கத்தகைமை ரீதியாகவும் சிறப்பான வழிகாட்டலை அவர் செய்திருந்தார்.

தற்போது 2022 இல் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற 20 க்கு 20 கிரிக்கற் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட தனுஸ்க குணதிலக பாலியல் வல்லுறவுக் குற்றத்தில் ஈடுபட்டு நாட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். விளையாட்டுத்துறைக்கு உடல்தகுதி மட்டுமல்ல,ஒழுக்கத் தகுதி என்பதும் அவசியமானது என்பதை விளையாட்டுவீரர்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.இன்று எமது நாட்டில் அரசியல்,சட்டம், நிர்வாகம்,நீதி,நிதி,பாதுகாப்பு,கல்வி, சுகாதாரம் என்று பல துறைகள் காணப்படுகின்றன.இத்துறைகளில் பணியாற்றுமோர் ஒழுக்கத் தகுதிகளை இழந்தால் அவர்களது ஏனைய தகுதிகள் பூச்சியமாகி விடுகின்றன.பூச்சியத்தால் எந்தப்பெரிய இலக்கத்தைப் பெருக்கினாலும் அது பூச்சியமாகிவிடும்.அது போன்றுதான் எப்பெரிய சீமானும் ஒழுக்கத்தில் பூச்சியமானால் எல்லாவற்றிலும் பூச்சியமாகி விடுகின்றான். இறுதியுத்தத்தின் போது படையினர் சிலர் பாலியல் குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.அதே போல் பாலியல் குற்றம் இழைத்த அரசியல்வாதிகள் பற்றியும் கூறப்படுகின்றன. மேலும் ஏனைய துறைகளிலும் பாலியல் குற்றவாளிகள் காணப்படுகின்றார்கள்.இவ்வாறான குற்றவாளிகள் ஒரு சிலர் இருந்தாலே அத்துறைகள் களங்கமாகி விடுகின்றன. ''அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்''என்பது பொய்யாமொழி வாக்காகும்.ஒருவர் எத்துணை வல்லவராக இருந்தாலும் பண்பு கெட்டவராயின் வெறும் மரமாகவே கணிக்கப்படுகின்றார்.இன்று எமது நாடு போர்க்குற்றம்,பொருளாதாரக் குற்றம்,மனித உரிமைக் குற்றம், அரசியல் குற்றம் என்று பல குற்றங்களைச் சுமப்பதற்கும் ஒழுக்கத்தகுதிகள் அற்றுப் போனைமையே காரணமாகவுள்ளது. ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஆழக்கம் உயிரிலும் ஓம்பப்படும்'' என்பதும் பொய்யா மொழி வாக்காகும்.ஒழுக்கம் உயிரை விட உயர்வாக மதிக்கப்பட வேண்டும். எனவே இலங்கை நாட்டுக்கு ஒழுக்கக் கல்வி என்பது மிக முக்கியமானதொன்றாகும். அதுவும் ஒழுக்கவழி காட்டுவதற்குப் புறப்பட்ட மதத்துறவிகள் பாலியல் குற்றங்கள் புரிந்து சிறைகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளதை காண்கின்றோம்.ஒழுக்கமற்ற எந்தக் கல்வியோ துறையோ வெற்றியடையாது. அப்படியான ஒழுக்க மற்றவர்களால் வழிநடாத்தப்படும் நாடும் வெற்றி அடைவதில்லை என்பதுதான் யாதார்த்த உண்மையாகும்.ஒழுக்க ரீதியாகக் குற்றமிழைத்த சிலர் அரசியல் அதிகாரக்கவசத்தால் பாதுகாக்கப்படுவதாலும்,அவர்கள் உயர்பதவிகளில் அமர்த்தப்படுவதாலும் ஒழுக்கமற்ற செயற்பாடுகள் அதிகரிக்கின்றன.அதிகாரம்,பணம்,பதவி என்கின்ற பலங்களின் பின்னால் பல ஒழுக்கமற்ற செயல்கள் நடைபெறுகின்றன.சட்டம் சிலந்தி வலையாகப் பலவீனம் அடைந்தால்,அதில் பலவீனமான உயிரிகள் சிக்குகின்றன. பலமான குளவிகள்,வண்டுகள் சட்டவலைகளை அறுத்துத் தப்புகின்றன.இதனால் குற்றங்கள் மலிகின்றன. குற்றவாளிகள் சுதந்திரமாக உலாவுகின்றனர். எல்லாத் துறைகளுக்கும் அடிப்படையான பாதுகாப்புக் கவசமாக இருப்பது ஒழுக்கமாகும். அந்தத் தகுதி இருந்தால்தான் ஒவ்வொரு துறையிலும் நம்பகமான நிலையான வெற்றிகளை நிலைநாட்ட முடியும். உலகளாவிய ரீதியில் இலங்கை கிரிக்கற் வீரர்களுக்கு என்று ஒரு கௌரவமான கணிப்புக் காணப்பட்டது. அந்தக்கணிப்பை உச்சப்படுத்திய வீரராக முன்னாள் கிரிக்கற் அணித்தலைவர் அர்ச்சுன ரணதுங்கவைக் குறிப்பிடலாம்.1996 இல் எமது கிறிக்கற் அணி உலகச் சாம்பியன் ஆனது.அதற்கு விளையாட்டுத் தகைமைரீதியாகவும், ஒழுக்கத்தகைமை ரீதியாகவும் சிறப்பான வழிகாட்டலை அவர் செய்திருந்தார். தற்போது 2022 இல் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற 20 க்கு 20 கிரிக்கற் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்ட தனுஸ்க குணதிலக பாலியல் வல்லுறவுக் குற்றத்தில் ஈடுபட்டு நாட்டுக்குக் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். விளையாட்டுத்துறைக்குஉடல்தகுதிமட்டுமல்ல,ஒழுக்கத் தகுதி என்பதும் அவசியமானது என்பதை விளையாட்டுவீரர்கள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும்.இன்று எமது நாட்டில் அரசியல்,சட்டம், நிர்வாகம்,நீதி,நிதி,பாதுகாப்பு,கல்வி, சுகாதாரம் என்று பல துறைகள் காணப்படுகின்றன.இத்துறைகளில் பணியாற்றுமோர் ஒழுக்கத் தகுதிகளை இழந்தால் அவர்களது ஏனைய தகுதிகள் பூச்சியமாகி விடுகின்றன.பூச்சியத்தால் எந்தப்பெரிய இலக்கத்தைப் பெருக்கினாலும் அது பூச்சியமாகிவிடும்.அது போன்றுதான் எப்பெரிய சீமானும் ஒழுக்கத்தில் பூச்சியமானால் எல்லாவற்றிலும் பூச்சியமாகி விடுகின்றான்.

இறுதியுத்தத்தின் போது படையினர் சிலர் பாலியல் குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.அதே போல் பாலியல் குற்றம் இழைத்த அரசியல்வாதிகள் பற்றியும் கூறப்படுகின்றன. மேலும் ஏனைய துறைகளிலும் பாலியல் குற்றவாளிகள் காணப்படுகின்றார்கள்.இவ்வாறான குற்றவாளிகள் ஒரு சிலர் இருந்தாலே அத்துறைகள் களங்கமாகி விடுகின்றன. ''அரம்போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்''என்பது பொய்யாமொழி வாக்காகும்.ஒருவர் எத்துணை வல்லவராக இருந்தாலும் பண்பு கெட்டவராயின் வெறும் மரமாகவே கணிக்கப்படுகின்றார்.இன்று எமது நாடு போர்க்குற்றம்,பொருளாதாரக் குற்றம்,மனித உரிமைக் குற்றம், அரசியல் குற்றம் என்று பல குற்றங்களைச் சுமப்பதற்கும் ஒழுக்கத்தகுதிகள் அற்றுப் போனைமையே காரணமாகவுள்ளது. ''ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஆழக்கம் உயிரிலும் ஓம்பப்படும்'' என்பதும் பொய்யா மொழி வாக்காகும்.ஒழுக்கம் உயிரை விட உயர்வாக மதிக்கப்பட வேண்டும். எனவே இலங்கை நாட்டுக்கு ஒழுக்கக் கல்வி என்பது மிக முக்கியமானதொன்றாகும். அதுவும் ஒழுக்கவழி காட்டுவதற்குப் புறப்பட்ட மதத்துறவிகள் பாலியல் குற்றங்கள் புரிந்து சிறைகளுக்குள் அடைக்கப்பட்டுள்ளதை காண்கின்றோம்.ஒழுக்கமற்ற எந்தக் கல்வியோ துறையோ வெற்றியடையாது. அப்படியான ஒழுக்க மற்றவர்களால் வழிநடாத்தப்படும் நாடும் வெற்றி அடைவதில்லை என்பதுதான் யாதார்த்த உண்மையாகும்.ஒழுக்க ரீதியாகக் குற்றமிழைத்த சிலர் அரசியல் அதிகாரக்கவசத்தால் பாதுகாக்கப்படுவதாலும்,அவர்கள் உயர்பதவிகளில் அமர்த்தப்படுவதாலும் ஒழுக்கமற்ற செயற்பாடுகள் அதிகரிக்கின்றன.அதிகாரம்,பணம்,பதவி என்கின்ற பலங்களின் பின்னால் பல ஒழுக்கமற்ற செயல்கள் நடைபெறுகின்றன.சட்டம் சிலந்தி வலையாகப் பலவீனம் அடைந்தால்,அதில் பலவீனமான உயிரிகள் சிக்குகின்றன.பலமான குளவிகள்,வண்டுகள் சட்டவலைகளை அறுத்துத் தப்புகின்றன.இதனால் குற்றங்கள் மலிகின்றன.குற்றவாளிகள் சுதந்திரமாக உலாவுகின்றனர்.